கடுவல மாநகர சபை - 2024

-------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

கடுவல மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநரக சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கடுவல மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக என்னால் பாதகமான அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் 2.5 ஆம் பந்திக்கு இணங்க ஒரு நிறுவனம் அதன் நிதிக்கூற்றுக்களை அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்தி தயாரிக்க வேண்டிய போதிலும மீளாய்வாண்டில் விளம்பர பலகை வருமானமாக பணமாகப் பெற்ற ரூபா 10,160,169 மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. | பணமாகப் பெற்ற வருமானம் மாத்திரம் அடையாளங்கண்டு கணக்கு வைக்கப்பட்டது. | ஆண்டிற்கான வருமானங்களை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்று தொகுதிக்குள் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் எதுவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் அத்தகவல்களுடன் இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தியின் பிரகாரம் | எதிர்வரும் காலங்களில் அத்தகவல்களுடன் | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வலாண்டில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 1,290,000,000 பணம் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக உள்ளடக்கப்பட்டிருக்காமையின் காரணமாக மற்றும் சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் பெற்ற பணம் ரூபா 103,152 முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலுக்குள் மிகையாக காட்டப்பட்டதன் காரணமாக முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 1,290,103,152 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலான தேறிய காசுப் பாய்ச்சலினை தீர்மானிக்கும் போது மிகையில் அல்லது பற்றாக்குறையில் காட்டப்பட்ட மூலதனச் செலவுப் படிகள் ரூபா 12,567,698 மிகைக்கு செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் மூலதனப் படிகளாக ரூபா 62,222,716 கணக்கீட்டு அடிப்படை இல்லாது செம்மையாக்கியதன் காரணமாக ரூபா 49,655,018 ஆல் செயற்பாட்டு நடவடிககைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான அரசாங்க துறை கணக்கீட்டு நியமஙகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | நியமத்தின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.11 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய காலப்பகுதிக்குரிய பிழைகளை சரிசெய்தலின் தாக்கமாக நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்த ரூபா 42,449,171 உரிமை | உரிய பிழைகளை சரிசெய்து கொள்வதற்கு இணங்கிக்கொள்ளப்படுகின்றது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மூலதன்தில் மாற்றங்கள் கூற்றில் அடையாளங்காணப்பட்டு காட்டப்படாதிருந்ததுடன் மிகையில் அல்லது பற்றாக்குறையில் காட்டப்பட்ட மானியம் கணக்குகளில் செம்மையாக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | நியமத்தின் 5 ஆம் அத்தியாயத்தினல் 5.14(இ) மற்றும் (ஈ) பந்திகளின் பிரகாரம் இருப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காலப்பகுதியின் போது ஒரு செலவாகக் காட்டப்பட்ட இருப்புக்களின் பெறுமதி மற்றும் பதிவழித்தல்கள் அல்லது நட்டங்களாக காட்டப்பட்ட இருப்புக்களின் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலையான மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அறிக்கையிடப்படுகின்ற காலம் தொடர்பாக எதிர்வரும் காலங்களில் அடையாளங்காணக்கூடிய ஆபத்து இல்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான அரசாங்க துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | நியமத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் 6.13 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தினை பயன்படுத்துவதற்காக பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்திலிருந்து அதற்கு பெறுமானத் தேய்வு செய்தல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக சபையின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கைகளின் கீழ் 3.5 ஆம் பந்திக்கு இணங்க சொத்துக்களை கொள்வனவு செய்த திகதியை பொருட்படுத்தாது அந்த ஆண்டின் போது பெறுமானத் தேய்வு செய்யப்படாது அகற்றுதல் செய்யப்படுகின்ற ஆண்டின் போது ஆண்டு முழுவதற்குமாக பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது எனக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2024 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 261,538,264 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகணரங்களுக்காக நியமத்தின் பிரகாரம் | 2025 ஆம் ஆண்டிலிருந்து சபை கொள்வனவு செய்கின்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பெற்றுக்கொண்ட ஆண்டிலேயே பெறுமானத் தேய்வு செய்தலினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான அரசாங்க துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டிற்கு பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்காததுடன் அதில் ரூபா 4,716,889 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்குரிய வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 214,859 ஆகும். எஞ்சியுள்ள ரூபா 256,821,475 கிரயமான சொத்துக்கள் விடயம் என்ன என்பது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஏ) | நியமத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 11.10 மற்றும் 11.11 ஆம் பந்திகளின் பிரகாரம் முறையே மாநகர சபைக்கு எதிராக தரப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 18,100,000 தொகைக்குரிய 67 வழக்குகள் தொடர்பாக மற்றும் மாநகர சபையினால் வெளித்தரப்பினர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 4,993,450 தொகைக்குரிய 45 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கை மற்றும் குறிப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை . | வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஐ) | நியமத்தின் 15 ஆம் அத்தியாயத்தின் 15.3 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பரிமாற்றம செய்யப்படுகின்ற மற்றும் பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைக்க வேண்டியதான ரூபா 270,918,952 காணப்பட்டிருந்தும் அவற்றின் மீது சேதங்களுக்கான ஏற்பாடுகளை அயைடாளங்கண்டு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்காததனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் சொத்துக்கள் அதிகரித்தும் விபரமான வருமானக் கூற்றில் மிகைகள் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| (அ) பல ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டின் போதும் சேகரிக்க கூடியதாக இருந்த முத்தரை கட்டண வருமானத்தினை விட மதிப்பீடு செய்யப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் குறைவடைந்ததன் அடிப்படையில் 2024 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 652,848,723 ஆக இருந்த போதிலும் முன்னைய ஆண்டிற்காக நடைமுறை ஆண்டில் பணமாகப பெற்ற முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,338,583,539 ஆகும். அதன் வித்தியாசம் ரூபா 685,734,816 தொகையையும் நடைமுறை ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 671,000,000 தொகையையும் ஆண்டில் பணமாகப் பெற்ற முத்திரை கட்டண வருமானத்திற்கு செம்மையாக்கியதன் பின்னர் கிடைக்கின்ற மிகுதிப் பெறுமதியானது ஏற்கனவே பெற்ற முத்திரைக் கட்டண வருமானமாகக் கருதி நடைமுறைச் சொத்துக்களுக்கான ஒரு செலவு மீதியாக காட்டியதன் காரணமாக ஆண்டிற்கான நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 14,734,816 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முத்திரை கட்டண வருமானத்தை சரியாக கணக்கீடு வேண்டும். |
| (ஆ) கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் தொடர்பாக மாகாண வருமான திணைக்களத்திற்கு அனுப்பப்பட பட்டோலைக்கு இணங்க 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உரிய கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 392,020,279 தொகையும் 2024 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்டு கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 671,000,000 முத்திரை | நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முத்திரை கட்டண வருமானத்தினை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டண வருமானமும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 1,063,020,279 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டில் மூலதன செலவு மானியங்களைப் பெற்றுக்கொள்ளல் ரூபா 130,135,081 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 120,800,407 ஆகக் காட்டப்பட்டதன் காரணமாக ஏனைய விபரமான வருமானம் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் தேறிய சொத்துக்களும் ரூபா 9,334,674 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | மூலதன மானியத்தை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 1,842,659,919 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,745,551,448 ஆக காட்டியதன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 97,108,471 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான வைப்புக்களின் பெறுமதியை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி கணக்கின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானமாக ரூபா 134,519,604 காட்டப்பட்டிருந்தும் அத்திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 16,025,933 ஆக இருந்ததனால் நடைமுறைச சொத்துக்கள் ரூபா 118,493,671 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வட்டிப் பணத்தை மாத்திரம் கணக்கீடு செய்வதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய வட்டி வருமானத்தை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | மாநகர சபையின் நிதிக் கூற்றுக்களுக்குரிய கணக்கீட்டு கொள்கையின் 3.7 ஆம் பந்திக்கு இணங்க வருமானத்தை அடையாளம் காண்பது அட்டுறு அடிப்படையில் இருக்க வேண்டும். அதற்கிணங்க | 2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 145,699,277 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 166,958,094 ஆக காட்டப்பட்டிருந்ததனால் பரிமாற்ற கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானம் ரூபா 21,258,817 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (எ) | அதுருகிரிய, கடுவல, பத்தரமுல்ல ஆகிய பிரதேசங்களில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வேலை முடிவு செய்யப்படாத நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 26,065,672 தொகை நிதிக் கூற்றுக்களில் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யாமையின் காரணமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நாட்குறிப்புக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறை வேலைகளின் பெறுமதியை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஏ) | சபையினால் பேணப்பட்டு வருகின்ற சுதந்திர ஆயுர்வேத மருந்துச்சாலைகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மருந்து இருப்புக்களை நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,423,459 ஆகக் காட்டியிருந்தும் மருந்துச்சாலைகளிலிருந்து கிடைத்த பட்டோலைகளுக்கு இணங்க பௌதீக மீதி ரூபா 6,052,915 என்பதனால நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 4,370,544 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டின் இறுதியில் உள்ள இருப்பு மீதியினை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஐ) | இருப்பு பொழிப்பு பட்டியலுக்கு இணங்க 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 44,054,848 ஆன பௌதீக இருப்புககளை நிதிக்கூற்றுக்களில் ரூபா 157,879,708 ஆகக் காட்டியதன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 113,824,860 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மாநகர சபையின் நூல் நிலைய புத்தகங்களை கொள்வனவு செய்யும் கணக்கின் மீதி ரூபா 2,173,533 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 2,526,678 ஆக இருந்ததனால் ரூபா 353,145 வித்தியாசமாகும். | கையிலுள்ள இருப்பு அறிக்கையின் பிரகாரம் மீதி ரூபா 2,357,526 ஆகும். | கணக்கிணக்கமின்மையினை அடையாளங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மாநகரசபை வீதவரியும் வரியும் மற்றும் வாடகை வருமானங்களை விலைப்பட்டியலிடப்பட்ட பெறுமதி முறையே ரூபா 253,835,066 மற்றும் ரூபா 22,228,593 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதி முறையே ரூபா 233,673,881 மற்றும் 22,041,876 ஆக இருந்ததனால் ரூபா 20,161,185 மற்றும் ரூபா 186,717 வித்தியாசமாகும். | பதில் வழங்கப்படவில்லை. | கணக்கிணக்கமின்மையினை அடையாளங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **(அ)** | **மாநகர சபை கட்டளைச் சட்டம்** | | | |
| (i) | 38 ஆம் பிரிவு | யாகால கியகடித்த சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட நடைபாதை அதுருகிரிய ஸ்டெல்மேஜ் தோட்ட வீடமைப்பு தொகுதியின் | சபையின் ஊழியர்களைப் பயன்படுத்தி தற்பொழுது சுத்தம் செய்யப்பட்டுள்ளது. | சபையின் நடமாடுகின்ற பாதையினை சபையினால் நாளதுவரையாக் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சமூக மண்டபத்தினை சுற்றி நிர்மாணிக்கப்பட்ட நடைபாதையினை பொது மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் நாளதுவரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | கி பேணுதல் வேண்டும். |
| | (ii) | 40(i) மற்றும் (iii) ஆம் பிரிவுகள் | கடுவெல மாவட்ட அலுவலகத்தில் 2024 செப்தெம்பர் 03 ஆந் திகதி வரை கிடைத்துள்ள 405 மின்சார முறைப்பாடுகளில் 244 முறைப்பாடுகளை அத்திகதி வரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு தீர்த்துவைக்கப்படாத முறைப்பாடுகளுக்கு மத்தியில் 09 மாதங்களை மிகைத்திருந்த முறைப்பாடுகளும் உள்ளன. | மின்சார முறைப்பாடுகளை விரைவாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியாது | மாநரகர சபை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| | (i) | நி.பி 102, நி.பி 103(1) மற்றும் 104, | தலாஹேன மயானத்தில் அமைந்துள்ள மரக்குற்றி, சுற்றளவு 09 அடிக்கும் 9 ½ அடிக்கும் இடைப்பட்ட அளவினைக் கொண்ட தேக்கு மரக்குற்றி காணாமல போயுள்ளமை சம்பநதமாக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்காததுடன் பொலிசிற்கும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அது சம்பந்தமாக விசாரணைகளை நடாத்தி பொறுப்புக்கூற வேண்டியவர்களையும் நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | நி.பி 395(இ) | வங்கி கணக்கு உள்ள அனைத்து | மென்பொருளில் காணப்பட்ட | ஒவ்வொரு மாதத்தினதும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திணைக்களத்தினாலும் ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கி கணக்கிணக்க கூற்றினைத் தயாரிக்க வேண்டிய போதிலும் சபையினால் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்ற மாதத்திற்குரிய வங்கி கணக்கிணக்க கூற்றினைத் தயாரிப்பதற்காக 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. | குறைபாடுகள் தற்பொழுது தயார்படுத்தப்பட்டு வருவதுடன் ஏனைய மென்பொருள் முறைமையினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வங்கி கணக்கிணக்க கூற்று அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| | (iii) நி.பி 396(ஈ) | சபையினால் 2022 ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து 2024 யூன் 28 அந் திகதி வரை வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத மொத்தமாக ரூபா 5,808,099 பெறுமதியான 90 காசோலைகள் தொடர்பாக நி.பி 396 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2020 பெப்ரவரி 12 ஆந் திகதியிலிருந்து 2024 நவம்பர் 30 ஆந் திகதி வரை தேறப்படாத ரூபா 2,476,473 பெறுமதியான 42 காசோலைகள் மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது அடையாளங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 3,363,926 மற்றும் அடையாளங் காணப்படாத கொடுப்பனவுகள் ரூபா 12,400 என்பன தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 396 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத 44 காசோலைகள் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது எனவும் மிகுதிக் காசோலைகளை சபை வருமானத்திற்கு எடுத்துக் கொள்வதற்கும் உரிய முன்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நிழதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி | (i) எல்லையை மிகைத்து ரூபா 2,845,572 தொகையான உப கட்டுநிதிகள் 09 சந்தர்ப்பங்களின் | சபையின் சேவை தேவைப்பாட்டிற்கு இணங்க நிருவாகக் குழுவின் தீர்மானத்தைப் | சுற்றறிக்கையின் பிரகாரம் உபகட்டுநிதி வழங்கப்படுதல் வேணடும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 9.1(ஆ) பந்தி | போது செலுத்தப்பட்டிருந்தது. | பெற்று இந்த முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. | |
| | | (ii) 59 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த 7,022,838 ஆன குறித்த யெலுக்கான உபகட்டுநிதிகளை தீர்த்துவைப்பதற்கு 14 நாட்களிலிருந்து 263 நாட்கள் வரையான தாமதம் ஏற்பட்டிருந்தது. | நகர கணக்காளருக்கு முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்கு தெரியப்படுத்துவது தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்பாடுகளைப் பூர்த்தி செய்த உடன் குறித்த செயலுக்கான உப கட்டு நிதிகள் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |
| | | (iii). 2024 நவம்பர் 25 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 160,000 முற்பணம் உரிய செயற்பாடு நிறைவேற்றப்படாது 20 நாட்கள் அந்த உத்தியோகத்தரின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் முற்பணங்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தின் போது உரிய உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணங்களை வழங்குதலும் தீர்த்துவைத்தலும் முறைமைப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஈ) | நிதி, பொருளாதார ஸ்திரதன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2024 சனவரி 10 ஆந் திகதி வழங்கப்பட்ட 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | தேசிய விழாவாக வருடாந்த மதிப்பீடுகளில் உறுதியாகக் குறிப்பிடப்படாத நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாத நத்தார் விழாவிற்காக 2024 திசெம்பர் 21 ஆந் திகதி ரூபா 536,250 செலவு மாநகர சபையினால் செலவு செய்யப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையின் அடிப்படையில் நத்தார் விழாவிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் இந்த ஆண்டின் போது குறிப்படத்தக்க அளவில் அதிகரித்திருந்தது. | தேசிய பாதீட்டு சுற்றிறக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 73,602,936 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 62,486,268 ஆகும்.

## 2.2 நிதி கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையிடம் ரூபா 600,328 மீதி உடனான ஒரு நடைமுறைக் கணக்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | கணக்கிலுள்ள பணத்தை சபையின் தற்பொழுது கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படுகின்ற கணக்கிற்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயற்பாடற்ற வங்கி கணக்கினை மூடி காசு மீதியினை சபையின் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றுதல் வேண்டும். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்த வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான் மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீத வரியும் வரியும் | 206,647 | 215,641 | 141,562 | 74,079 | 189,810 | 210,079 | 172,380 | 37,700 |
| (ii) | வாடகை | 11,694 | 13,431 | 12,513 | 918 | 9,924 | 9,557 | 11,098 | 0 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணம் | 10,135 | 10,463 | 12,728 | (2,265) | 10,335 | 10,335 | 11,504 | 0 |
| (iv) | ஏனைய வருமானம் | 40,689 | 40,689 | 36,846 | 3,842 | 14,843 | 14,843 | 14,604 | 239 |
| | | ---------- | --------- | --------- | -------- | ---------- | --------- | --------- | |
| | | 269,165 | 280,224 | 203,649 | 76,574 | 224,912 | 244,814 | 209,586 | --------37,939 |

### 2.3.2 வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 03 ஆண்டுகளை மிகைத்து நிலுவையாக உள்ள வீதவரி வருமானம் ரூபா 42,498,260 ஆகும். | குறிப்பு இலக்கம் 06 இல் வீதவரி மற்றும் வரியின் கீழ் வருடாந்தம் பட்டியலிடப்பட்ட மற்றும் சேகரித்த வருமானம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நிலுவையான விதவரி வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) பொழுது போக்கு வரி** | | |
| 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 03 ஆண்டுகளை மிகைத்து | தகவல்களைப் பெற்ற பின்னர் மீண்டும் வழக்கு தாக்கல் செய்வதற்கு | நிலுவையான பொழுது போக்கு வரி வருமானத்தை அறவீடு |

| | | |
|---|---|---|
| நிலுவையாக உள்ள பொழுது போக்கு வரி வருமானம் ரூபா 5,388,708 ஆகும். | நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தியேட்டர்களிலிருந்து அறவிட வேண்டியுள்ள நிலுவை வருமானத்திற்காக கடுவல மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரை கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 33,215,478 ஆகும். | ஆண்டிற்கான தண்டப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக தேவையான ஆவணங்கள் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்சித்திட்டம் மற்றும் சபையினால் ரூபா 4.4 மில்லியன் செலவு செய்து ஆரம்பிக்கப்பட்டிருந்த உயிரியல் வாயுவினை உருவாக்கும் செயற்திட்டத்தின் மூலம் உருவாக்கிய மின்சாரத்தை Net metering முறைமையில் மின்சார சபைக்கு வழங்கியமைக்காக 2023 சனவரி 21 ஆந் திகதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தும் தேசிய மின்சார முறைமைக்கு 07 மாதங்களுக்கு மாத்திரமே மின்சாரத்தை வழங்குவதற்கான இயலுமை காணப்பட்டது. உயிரியல் வாயு பிரிவு 02 மாதங்களுக்கு மாத்திரமே உச்ச அளவு இயலளவில் செயற்பட்டிருந்த போதிலும் 10 மாதங்களாக செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதனால் எதிர்பார்த்த குறிக்கோளினை | உயிரியல் வாயு மூலம் தேசிய மின்சக்தி முறைமைக்கு மின்சாரத்தினை வழங்குகின்ற செயற்திட்டம் தொடர்பான தகவல்கள் கிடைத்திருககவில்லை. | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக உச்ச அளவு வினைத்திறனுடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | அதுருகிரிய ஸ்டேல்மேஜ் தோட்டம் சதாசிபுர வீடமைப்பு தொகுதிக்கு அருகாமையிலுள்ள சமூக மண்டபத்தை சுற்றி சபை நிதியை செலவு செய்து நிர்மாணிக்கப்படட நடைபாதை 2018 ஆகஸ்ட், செப்தெம்பர் மாதங்களின் போது கொங்கிரீட் கல் பரப்பி புதுப்பிப்பதற்காக சபையினால் ரூபா 781,722 செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த நடைபாதையானது முறையாக பராமரிக்கப்படாமையால் மீண்டும் அதிக செலவு செய்து திருத்தம் செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது என பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | அந்த நடைபாதையானது சபையின் ஊழியர்களைப் பயன்படுத்தி தற்பெழுது துப்பரவு செய்யப்பட்டுள்ளது. | சபையின் சொத்துக்களை நாளதுவரையாகப் பராமரித்தல் வேண்டும். |
| (இ) | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 285,111,688 மற்றும் நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதி ரூபா 83,178,515 இற்காக பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 161,870,387 மீதிக்கான நடைமுறை வேலை தொடர்பான பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை இதனுடன் சமர்ப்பிக்கபபடுகின்றது. | காலப் பகுப்பாய்வினை நிர்ணயிக்கப்பட்டவாறு தயாரித்து பட்டியலுடன் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஈ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதி ரூபா 83,175,515 ஆகும். நிர்மாண வேலை கடன்பட்டோர் பட்டியலுக்கு இணங்க 2024 ஆம் ஆண்டில் உருவாகியுள்ள நிர்மாண வேலை கடன்பட்டோர ரூபா 46,009,993 ஆக இருந்த போதிலும் முன்னைய ஆண்டுகளுக்குரிய கடன் பட்டோர் பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததனால் மேற்கூறிய மீதியை கணக்கிணக்கம் செய்ய முடியாதுள்ளது. | பதில் வழங்கப்படவில்லை. | நிர்ணயிக்கப்பட்டவாறு பட்டியலைத் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (உ) | நிதிக் கூற்றுக்களில் களஞ்சிய கடன்கொடுத்தோர் இறுதி மீதி ரூபா 190,181,813 ஆகக் | பதில் வழங்கப்படவில்லை. | நிர்ணயிக்கப்பட்டவாறு பட்டியலைத் தயாரித்து |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான களஞ்சிய கடன்கொடுத்தோர் மீதியாக பட்டியல்களில் ரூபா 23,741,657 ஆன ஆண்டின் போது உருவாகிய களஞ்சிய கடன்கொடுத்தோர் மாத்திரம் காட்டப்பட்டிருந்ததுடன் அதற்கு முன்னைய ஆண்டுகளில் உருவாகிய களஞ:சிய கடன்கொடுத்தோர் உள்ளடக்கப்பட்டிருக்காததனால் கணக்காய்வின் போது திருப்தி கொள்ள முடியாதுள்ளது. | | கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாநகர சபையின் ஜயவடனகம கீகங்கா விழா மண்டபம் மாதாந்த குத்தகை வாடகை ரூபா 70,000 வீதம் மற்றும் வருடாந்த 10 சதவீதத்தினால் அதிகரிக்கும் நிபந்தனையின் அடிப்படையில் 2018 நவமபர் 07 ஆந் திகதி குத்தகைதாரருடன் 05 ஆண்டுகளுக்கு குத்தகை உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. 2020 செப்தெம்பர் மாதத்திலிருந்து 2023 மே மாதம் வரையான 33 மாத காலத்திற்காக திரண்ட நிலுவையான குத்தகை வாடகை மற்றும் மிகைக் கட்டணமாக ரூபா 2,894,772 தொகை குத்தகைதாரரிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்தும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அந்த நிலுவைப் பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது விழா மண்டபத்தினை திருத்தம் செய்யும் நடவடிக்கை இரண்டு சமூக சபைகளின் மூலம் 02 கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு அதற்காக சபை நிதியிலிருந்து முறையே ரூபா 3,000,000 மற்றும் ரூபா 4,000,000 செலுத்தப்பட்டிருந்தும் அந்த நடவடிக்கை கண்காணிப்புச் செய்யப்படவில்லை. அவ்வாறே மேற்கூறிய உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 7(1) இன் பிரகாரம் விழா மண்டபத்திற்கு வெளியே நிர்மாண | ஜயவடனகம கீகங்கா விழா மண்டபத்தினை திருத்தம் செய்து தற்பொழுது ஒரு மாதத்திற்கு ரூபா 100,000 வீதம் அறவீடு செய்வதற்கு உடன்படிக்கை செய்து ஒரு நபருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவையான குத்தகை வாடகையினை அறவீடு செய்வதற்கு நவடிக்கை எடுக்க வேண்டியதுடன் திருத்தம் செய்யும் நடவடிக்கையானது சபையின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். |

வேலைகள் மற்றும் பொது இடங்களின் பராமரிப்பும் திருத்தம் செய்தல்களும் சபையினால் காலத்திற்கு காலம் செய்யப்பட வேண்டிய போதிலும் குத்தகைதாரரினால் அவரின் தனிப்பட்ட செலவில் ரூபா 90 இலட்சம் விழா மண்டபத்தின் திருத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது என 2022 திசெம்பர் 05 ஆந் திகதி தெரியப்படுத்தியிருந்தும் அது தொடர்பாக முறையான கண்காணிப்பு செய்யப்படவில்லை.

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2024 யூலை 25 ஆந் திகதி கதிரைகளை கொள்வனவு செய்த நிறுவனத்திடமிருந்து ஒரு கதிரை ரூபா 1,900 தொகைக்கு கொள்வனவு செய்வதற்கு நிருவாகம் தீர்மானம் எடுத்திருந்தும் உரிய விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6.1 ஆம் வழிகாட்டிக்கு முரணாக 2024 யூலை 30 ஆந் திகதி ஒரு மாதம் கடப்பதற்கு முன்னர் மீண்டும் விலை மனுக்களை கோரி கிடைத்த ஆகக் குறைந்த விலையான ரூபா 2,850 வீதம் ரூபா 200,000 பெறுமதியான 70 கதிரைகளை கொள்வனவு செய்ததன் காரணமாக சபைக்கு ரூபா 66,500 நட்டம் ஏற்பட்டிருந்ததனால் அந்த நட்டமானது உரிய விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கவனயீனத்தின் காரணமாக ஏற்பட்டிருந்தது. | 2024 ஏப்ரல் 24 ஆந் திகதி நிருவாகக் குழு தீர்மானம் இலக்கம் 156 இற்கு இணங்க மீண்டும் விலைமனு கோர வேண்டி ஏற்பட்டடிருந்தததானது ஏற்கனவே கொள்வனவு செய்த அளவு 100 கதரைகளாக இருந்ததுடன் அந்த அளவில் 50 சதவீதத்தினை விட மிகையாக கொள்வனவு செய்வதற்கு கருத்தில் கொள்ளப்பட்டதினாலாகும். | நட்டத்தை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவிற்கு முரணாக 07 ஆண்டுகள் காலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட நிறுவனத்தின் பிரதான பதவியான நகர செயலாளர் பதவிக்காக நிரந்தர நியமனம் | இப்பதவி வெற்றிடம் காணப்படுகின்றது என உள்ளூராட்சி திணைக்களத்திற்கு தெரியப்படுத்துதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசாங்க சேவைகள் | நகர செயலாளர் பதவிக்காக நிரந்தர நியமனம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படாது வெற்றிடமான திகதியிலிருந்து பதில் கடமை பார்க்கும் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | ஆணைக் குழுவினால் ஒரு நிரந்தர உத்தியோகத்தரினை நியமித்து அனுப்பிய உடன் இந்த நியமனத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | மூன்றாம் மட்ட சேவை தொகுதியில் அங்கீகரித்த 07 பதவிகளுக்கு மத்தியில் 03 பதவிகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் சேவையில் ஈடுபட்டிருந்த 04 உத்தியோகத்தர்களில் ஒரு உத்தியோகத்தர் நகர செயலாளர் பதவியில் பதில் கடமை ஆற்றியதன் காரணமாக ஒரு நிருவாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக இருந்தது. | நகர ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சபையின் அதிகாரங்களின் பிரகாரம் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வருமான பரிசோதகர் (விசேடம்) பதவி 08 ஆண்டுகளாகவும் மொழி பெயர்ப்பாளர் பதவி 12 ஆண்டுகளாகவும் வெற்றிமாகக் காணப்பட்டன வருமானத்துடன் தொடர்புபட்ட பிரதான பதவி அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து வெற்றிடமாக இருந்தமையானது புதிய வருமான வழிகளை அடையாளம் காணல், காண் வருமானங்களை சேகரித்தல் மற்றும் நிலுவையாக உள்ள வருமானங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் முதலியவை தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | வழக்கு முடிவடையும் வரை பதவிக்காக ஆட்சேர்த்தல் தடை செய்யப்பட்டுள்ளதனால் வெற்றிடமாகக் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அங்கீகரித்த 12 வருமான பரிசோதகர் பதவிகளுக்கு மத்தியில் 09 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதன் காரணமாக வருமானங்களை சேகரிக்கும் பொறுப்பு வெளிக்கள வேலையாட்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | வழக்கின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நிறுத்திவைக்கப்பட்டுள்ளதனால் ஏனைய பதவிகளிலுள்ள ஊழியர்களுக்கு அப்பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. | சட்ட நடவடிக்கைகள் முடிவடைந்த உடன் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |
| (உ) | அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் XVIII ஆம் அத்தியாயத்தின் 195 ஆம் பந்திகளிலுள்ள 06 ஆம் மற்றும் | அடுத்த வருடந்த இடமாற்றத்தினை அமுல்ப்படுத்துகையில் 05 ஆண்டுகளை மிகைத்த | வருடாந்த இமாற்றத்தீனை அமுல்ப்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| 203 ஆம் பந்திகளுக்கு முரணாக சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் மட்டங்களிலுள்ள 133 உத்தியோகத்தர்களில் 59 உத்தியோகத்தர்கள் 04 ஆண்டுகளுக்கும் 29 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட நீண்ட காலமாக தொடர்ச்சியாக சபையின் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்கலாம். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **செயல் நடவடிக்கைத் திட்டம்** | | |
| 2024 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயல்முன்னேற்றத்திற்குப் பதிலாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிருவாக அறிக்கையின் ஆண்டின் செயல்முன்னேற்றத்தினை நிதி ரீதியாக அளவீடு செய்வதற்கு போதியளவு தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டுப் பெறுமதியும் நிதி ஏற்பாட்டு பயன்பாடும் சம்பந்தமான விபரம் குறிப்பிடப்படாமையால் நிதி செயலாற்றலினை கணிப்பீடு செய்ய முடியாதுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தினை நிதிரீதியாக அளவீடு செய்யக்கூடிய நிகழ்சித்திட்டங்களின் செயல் முன்னேற்றத்தினை உள்ளடக்கிய அறிக்கை இதனுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. | செயல்நடவடிக்கை திட்டத்தின் செயல்முன்னேற்றமானது நிதிசார் செயலாற்றலினை கணிப்பிடக்கூடிய வகையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |